**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE FAST TRACK COURT, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | STC.73/2022 |
| Deposition of witness | | DW1 |
| Name | | திரு. அருண் |
| Father's/Husband Name | | திரு. ராஜேந்திரன் |
| Village | | சென்னை |
| Taluk | | சென்னை |
| Caste | | - |
| Calling | | - |
| Religion | | - |
| Age | | 33/2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 21st day of December 2023

எதிரி ஆஜரில் உள்ளார். எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்.

**(சாட்சியிடம் சத்தியப்பிரமானம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் திரு. A. செல்வராஜ், bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது**

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

எனக்கு வங்கி மேலாளர் சாட்சியம் அளிக்க அளித்த கடிதம் **எசாஆ 1** ஆகும். எதிரி சையது முஸ்தப்பா எங்களது வங்கி கிளைக்கு 17.09.2021 ந் தேதியன்று வந்து

காசோலை எண்கள்180845, 180846, 180847 ஆகிய காசோலைகள் சம்பந்தமாக எங்களிடம் Stop payment செய்ய சொல்லி மனு கொடுத்தார். அதற்கான ஆதாரத்தை தாக்கல் செய்கிறேன். அது **எசாஆ 2** ஆகும்.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

17.09.2021 ந் தேதியன்று எதிரி எங்களது வங்கிக்கு வந்தார் என்பதற்கு தனியாக ஆதாரம் எதுவும் இல்லை. எசாஆ 2 ல் எதிரி 17.09.2021 ந் தேதியன்று வங்கிக்கு வந்தார் என்று குறிப்பு இல்லை என்றால் சரிதான். 17.09.2021 அன்று எதிரி கொடுத்த மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தேடிக்கொண்டிருக்கிறோம், இது வரை கிடைக்கவில்லை. அந்த மனுவில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. என்ன காரணத்திற்காக Stop payment செய்ய சொல்லி அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அந்த மனுவை பார்த்தால்தான் தெரியும். எசாஆ 2 ல் என்ன காரணத்திற்காக stop payment செய்ய சொல்லியுள்ளார்கள் என்று உள்ளதா என்றால் இல்லை.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

Signature of witness

*Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.*

Judicial Magistrate,

Fast Track Court (Magisterial Level)
Pattukkottai.